பக்கங்கள்:-19+06

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 08 | சனிக்கிழமை | 24.08.2024 | அதிர்வு 023

சஜித் அணியைச் சேர்ந்த

## மேலும் 3 எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு!



ஐக்கிய மக்கள் சக்தியின் மேலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு

04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ரணிலுக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்!

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சி கோரிக்கை



(கே.வசந்தன்)

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியே எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். முன்னாள் போராளிகள் தொடர்பான 5 கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எமது ஆதரவு ரணிலுக்கே.”

- இவ்வாறு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் இன்பராசா தெரிவித்தார்.

04▶

# ஜனாதிபதித் தேர்தல் மீறல் குறித்து இதுவரை 901 முறைப்பாடுகள் பதிவு

தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தல் மீறல்கள் தொடர்பில் இதுவரை (ஜுலை 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரை) 901 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 427 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ

04▶







# ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் ஊடகவியலாளர்களின் கடமை மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

ஊடகவியலாளர்களின் வகிபங்கை அர்த்தமுள்ள வகையில் அதிகரிக்கச் செய்ய வியூ அமைப்பால் விசேட பயிற்சி வேலைத்திட்டம் வடக்கு ஊடகவியலாளர்களுக்கு முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 10 மணி தொடக்கம் நடைபெற்ற இந்த வேலைத் திட்டத்தில் வியூ அமைப்பின் ஆலோசனை சபை பிரதானியும் முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய மற்றும் வியூ அமைப்பின் ஆலோசனை சபை உறுப்பினரும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் உறுப்பினருமான எம்.எம்.மொஹமட் ஆகியோர் தலைமை வளவாளர்களாகப் பங்கேற்றனர்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) ஸ்ரீமோகன் உள்ளிட்ட அதிகாரிகளும், ஊடகவியலாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.













# கண்டியில் பஸ் மோதி வயோதிபர் உயிரிழப்பு

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிமாவோ பண்டார நாயக்க மாவத்தையில் மணிக்கூண்டுக்கு அருகில் இடம் பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது என்று கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கடுகண்ணாவையிலிருந்து கண்டி நோக்கிபி பயணித்த பஸ் ஒன்றில் இருந்த வயோதிபர் ஒருவர் குறித்த பஸ்ஸிலி ருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டபோது அதே பஸ் ஸில் மோதி உயிரிழந்துள்ளார்.

மேற்படி வயோதிபரின் சடலம் கண்டி வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளவத்தை கடற்கரையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!



கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற் கரைப் பகுதியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய குடும் பஸ்தரே நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ள வத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதி ஒருவர் மரணம்

விரைவு ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு பெலியத்தை நோக்கிப் பயணித்த விரைவு ரயிலில் மோதியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார் என்று பேருவளை ரயில்வே பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பேருவளை சிறிநிவாச பகுதியில் வசிக்கும் 51 வயதுடைய நபர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் ரயில் கடவையை அண்மித் துப் பயணித்துக்கொண்டிருந்த வேளை ரயிலில் மோதுண்ட நிலையில் படுகாயமடைந்தார். இதையடுத்து பேருவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந் தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கிளிநொச்சி சொகுசு பஸ் மோதி ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ – 9 வீதி இயக்கச்சிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியைச் சேர்ந்த 40 வயது டைய நபரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பஸ் ஒன்று அந்தப் பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்றபோது வீதியால் சென்ற ஒருவர் திடீரென பஸ்ஸை வழிமறித்து ஏற முற்பட்ட வேளை பஸ் சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.





# ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ பேராயரை நேரில் சந்தித்துப் பேச்சு

ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலுக்கான நீதியை வழங்கும் பொருட்டு தன்னால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ, பேராயருக்கு விளக்கமளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கத் தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதாகவும் பேராயரிடம் விஜயதாஸ தெரிவித்தார்.





## ரணிலுக்கே தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் ஊடக சந்திப்பு இன்று வவுனியா, இரண்டாம் குறுக்கு தெருவில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியினராகிய நாம் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தோம். யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் முன்னாள் போராளிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள் பதிவிக்காகச் சண்டை பிடிக்கின்றார்களே தவிர முன்னாள் போராளிகள் தொடர்பில் பேசுவதில்லை.

எமது முன்னாள் போராளிகளுக்கு உதவி செய்பவர்களும், வெளிநாட்டில் இருந்து எம்மோடு இணைந்து பயணிப்பவர்களும் எம்மை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கச் சொன்னார்கள். அவரை நாம் சந்தித்து ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துப் பேசியிருந்தோம். இதன்போது எமது கோரிக்களை ஆழ்மனதுடன் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, நிச்சயமாக எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்ததன் பிரகாரம் எமது கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக முடிவெடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பிரதமராக இருந்தவர். இப்போது ஜனாதிபதியாக உள்ளார். அவர் சிறந்த இராஜதந்திரி. எமது போராட்ட வரலாறு அவருக்குத் தெரியும். தற்போது சாரைப் பாம்பு போன்று நாம் உள்ள நிலையில் நாம்தான் பேச வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுவதுதான் பொருத்தமானது. அதனால் நாம் அவரை நம்புகின்றோம்.

வடக்கு, கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகளுக்குப் பாதுகாப்பு வேண்டும். வீணாகப் போராளிகளை அழைத்து விசாரணைகள் என்ற ரீதியில் கைதுகள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். வடக்கு - கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகளுக்குத் தங்களூடாக உதவித் திட்டங்கள் மற்றும் பொருளாதார ரீதியான செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும் போன்ற கோரிக்கைகள் உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். முன்னாள் போராளிகள் 3 ஆயிரம் பேரின் பெயர் விபரங்களையும் அவரிடம் வழங்கியுள்ளோம். அவர்களுக்கு முதல் கட்டமாக வேலைத்திட்டங்களை வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

"ரணில் விக்கிரமசிங்க ஒரு நரி. அவரிடமே நாம் பேச்சு நடத்தினோம்" என்று பாலா அண்ணன் சொன்னவர். அந்த வளர்ப்பில் வந்தவர்கள்தான் நாங்கள். அவர் நரியோ, எலியோ, புலியோ, சிங்கமோ பிரச்சினை இல்லை. நாங்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நாங்கள் புலி. அவருக்குத்தான் எமது வலி தெரியும். அவருடன்தான் நாம் பேச முடியும். எனவே, தமிழ் மக்களும் முன்னாள் போராளிகளும் காஸ் சிலிண்டர் சின்னத்துக்கு மாத்திரம் புள்ளடியிட்டு ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்ய வேண்டும்." - என்றார்.

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

நிலையத்துக்கு 450 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஒரு முறைப்பாடும், ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

## மேலும் 3 எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரவளிக்கத் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

மூவரும் ஒரே தடவையில் அல்லாமல், தனித்தனியாக வருவதற்கும், அதன்மூலம் ஊடக அவதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு, தலதா அத்துகோரள பாணியில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உள்ளூராட்சித் தேர்தல் சிக்கல்

உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே அது சாத்தியமாகும் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பையடுத்து உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஏனைய ஆணையாளர்களுடன் இணைந்து எதிர்வரும் புதன் கிழமை (28 ஆம் திகதி) கலந்துரையாடப்பட இருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமாக உயர் நீதிமன்றம் காட்டமாக உத்தரவு ஒன்றை வழங்கி விட்டாலும், அதை செயற்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அது தொடர்பான அக்கப்போர் இனித் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

நிலுவையிலுள்ள ‘உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் - 2023’ ஐக் காலதாமதமின்றி - அட்டவணைப் படுத்தப்பட்ட ஏனைய தேர்தல்களுக்கு குழப்பம் ஏற்படுத்தாத வகையில் - நடத்தி முடிக்க வேண்டும் என்பதுதான் உயர் நீதிமன்ற உத்தரவு.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் இன்னும் குறைந்தபட்சம் 2,3 மாதங்கள் கழித்து நடத்துவது என்பது பொருத்தமானதா என்பதுதான் கேள்வி.

வேட்பு மனுத் தாக்கலுக்குப் பின்னரான இந்த காலத்தில் தேசிய ரீதியிலேயே அரசியல் களங்கள் தலைகீழாக மாறிவிட்டன. ஒரு தரப்பில் நின்ற அரசியல் அணிகள் எதிரெதிர் அணிக்குச் சென்று விட்டன. எதிரெதிர் அணிகள் ஒன்று பட்டிருக்கின்றன.

வேட்பு மனுக்களில் ஒரு பட்டியலில் இருப்போர் இப்போது எதிரெதிர் அணியில் உள்ளனர். எதிரெதிராக போட்டியிட வேட்பு மனுப் பட்டியல்களில் களமிறங்கியோர் இப்போது அரசியலில் ஓரணியில் நிற்கின்றனர்.

ஆகவே ஒன்றரை வருடங்களுக்கு முன்னைய வேட்பு மனுப் பட்டியலின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது என்பது ஜனநாயகத் தேர்தல் முறைகளில் பெரும் குழப்பத்தை கொண்டுவரக்கூடியது.

கடந்த ஆண்டு முற்பகுதியில் தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களையோ உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பையோ ரத்து செய்வதற்கான சட்ட ரீதியான நடவடிக்கை ஏதும் முன்னெடுக்கப்படாத நிலையில், அந்தத் தேர்தல் ஒழுங்கு நடைமுறையில் உள்ளது, அதை ஒட்டி அந்தத் தேர்தலை நடத்தும்படிதான் உயர்நீதிமன்றமும் உத்தரவிட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் இல்லாமல் புதிய வேட்பு மனுக் கோரி, புதிதாக ஆரம்பத்திலிருந்து அதை நடத்துவதாயின் ஒன்றில் நீதிமன்றத்திடம் போய் அனுமதி பெற வேண்டும். இல்லையேல் அந்தத் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றச் சட்டம் மூலம் பழைய வேட்பு மனுக்களையும் தேர்தல் அறிவிப்பையும் ரத்து செய்து புதிதாக நடத்துவதற்கான ஏற்பாட்டை சட்டத்தின் மூலம் உருவாக்க வேண்டும்.

இரண்டும் நடைமுறைச் சாத்தியமா என்பது கேள்விக்குறியே.

எனினும் ஏற்கனவே ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் தற்போதைய ஜனாதிபதிதேர்தலுக்குபின்னர்நிலுவையில் உள்ள இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முற்பட்டால் -

அந்த வேட்பு மனு தாக்கலுக்கும் அதன் வாக்களிப்புக்கும் இடைப்பட்ட ஒன்றரை ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தில் புதிய வாக்காளர்களாகப் பதிந்து, புதிதாகத் தம்மை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொண்டவர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு தங்களுக்கு மறுக்கப்படுகின்றது, இது வாக்காளனுக்கான சமூக உரிமையை பறிக்கும் ஏற்பாடு என்ற அடிப்படையில் ஆட்சேபத்தைத் தெரிவித்து, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து, நிவாரணம் கோரலாம்.

அத்தகைய மனுவின் மீதான விசாரணையின் பின்னர் புதிதாக வேட்பு மனுக்களை ஏற்று உள்ளூராட்சி தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பத்தில் இருந்து நடத்துங்கள் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிடக் கூடும்.

அதுதான் இந்தச் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கான ஒரே வழியாகும்.



# கல்லடி இராமகிருஷ்ணமிஷன் அறநெறிப் பாடசாலை வைரவிழா!

(பழுவூரான்)

கல்லடி ஸ்ரீஇராமகிருஷ்ணமிஷன் அறநெறிப் பாடசாலையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வைரவிழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை (24) கல்லடி சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இந்தியா தஞ்சாவூர் ஸ்ரீஇராமகிருஷ்ணமடத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தஜீ மஹராஜ் கலந்து கொண்டார்.

இதன்போது அறநெறிப் பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் மூத்த துறவி சுவாமி இராஜேஸ்வரானந்தஜீ மஹராஜ், இலங்கைக் கிளை உப தலைவர் அக்ஷராத்மானந்தஜீ மகராஜ், ஸ்ரீமத் சுவாமி சுரார்சிதானந்தஜீ மகராஜ் உட்பட இராம கிருஸ்ண மிஷன் இல்ல மாணவர்கள் மற்றும் தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# அம்பாறை - கொழும்பு பயணித்த பஸ் சாரதிக்கு மாரடைப்பால் விபத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவாலஹிந்த பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

அம்பாறை பஸ் நிலையத்திலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் கொழும்பு நோக்கி புறப்பட்ட இ.போ.ச.பஸ் சாரதிக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் பஸ் பாதையை விட்டு விலகி மரத்தில் மோதியுள்ளது.

இந்த நிலையில், பயணிகள் உடனடியாக பஸ் சாரதியை இங்கினியாகல வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த பஸ்ஸில் 40 பேர் பயணித்த போதிலும் ஒருவருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டுள்ளது என்று இங்கினியாகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# தெரணியகல தேர்தல் தொகுதிக்கு புதிய அமைப்பாளர் நியமனம்

கேகாலை மாவட்டம், தெரணியகல தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் கூட்டணியின் புதிய அமைப்பாளராக எம்.பரணிதரன் நேற்று நியமிக்கப்பட்டார்.

புதிய தொகுதி அமைப்பாளருக்கான நியமனக் கடிதத்தை ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் வைத்து சஜித் பிரேமதாஸ நேற்று வழங்கி வைத்தார்.





# நாம் இன மத பேதமின்றி நாட்டை கட்டியெழுப்புவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு

எமது நாட்டில் தற்பொழுது மோதலுடன் கூடிய அரசியல் யுகம் ஒன்று உருவாகி இருக்கிறது. கோபம், போட்டி, பகை, இனவாதம், மத வாதம் பழங்குடிவாதம், நிறவெறி சாதிப் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். நாடு வங்கரோத்து அடைந்து 220 லட்சம் மக்கள் தற்பொழுது கைவிடப்பட்ட



நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் தொடர்ந்தும் இனவாதத்துடன் செயற்படாமல் எல்லோரும் ஒன்றிணைந்து பொறாமை, வைராக்கியம், அதிகாரப் பேராவல் போன்றவற்றில் இருந்து விலகி நாட்டை கட்டி எழுப்ப ஒற்றுமையோடு இணைந்து செயற்படுவோம். இவ்வாறான பிரிவினைகளோடு நாம் முன்னோக்கிச் செல்ல முடியாது.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.


2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் 11 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று (23) மாலை கண்டி, அக்குரனை நகரில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் போலவே அந்தப் பகுதியை சேர்ந்த ஏராளமான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்கள் குறித்துச் சிந்திப்பதில்லை. பொது மக்களின் உயிர் நாடி தொடர்பில் புரிந்துணர்வின்றி செயற்படுகின்றனர். நல்லிணக்கம் சகோதரத்துவம் நட்பு என்பவற்றின் ஊடாக நாட்டு மக்கள் என்ற ரீதியில் ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டி எழுப்ப சக்தியை உருவாக்க வேண்டும். பல்வேறு காரணங்களுக்காக அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள இந்த நாட்டை ஒற்றுமையின் ஊடாகக் கட்டியெடுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைமாறு அனைவரிடமும் நட்புக் கரம் நீட்டுகிறேன்.

இன, மத, மொழி, குல ரீதியில் பிரித்து உருவான கடந்த அரசு நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சீரழித்து இருக்கிறது. இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி வீதிக்கிறங்கி போராடியுள்ளது. நல்லடக்கம் செய்வதா எரிப்பதா என்கின்ற பிரச்சினையின் போது மக்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தியே வீதிக்கிறங்கியது. மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்காகவும் ஐக்கிய மக்கள் சக்தி விதிக்கிறங்கியது. சிலர் வரப்பிரசாதங்களுக்கு அடிமைப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிராக நாடாளுமன்றத்திலே அடிப்படைவாத குற்றச்சாட்டுகளை முன்வைத்து நடந்து கொண்டனர்.- என்றார்.






# கர்மயோகி மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜீ!

## அவரது திருவுருவச் சிலை இன்று திறப்பு!!

உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனுக்கு மட்டக்களப்பு மாநிலம் உவந்தளித்த துறவிகளில் மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜீயும் ஒருவர் ஆவார்.

மட்டக்களப்புத் தமிழகம் தந்த அற்புதமான துறவி. சேவையின் சிகரம் எளிமையின் வடிவம் . காரைதீவு மண் ஈன்றளித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் மற்றும் சுவாமி நடராஜரானந்தர். அவர்களுக்கு அடுத்ததாகக் கிழக்கு மண்ணில் தோன்றி அரிய சேவை செய்தவர் சுவாமி ஜீவனானந்தர். "என்னை இயக்குபவன் இறைவனே. நான் ஒரு அனாமதேயம்" என்று கூறி அனைவரையும் கவர்ந்த மாமனிதர்.

அவர் மட்டக்களப்பில் வலையிறவு என்னும் கிராமத்தில் 1925 ஆம் ஆண்டு பிறந்தார். பெரும் நிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து சிவானந்தாவிலே கல்விகற்று சுவாமிகளின் பின்னணியில் வளர்ந்து "சீனிவாசகம்" என்ற பெயரோடு வாழ்ந்து துறவியானார். இ.கி.மிசனில் இணைந்து கொண்ட அவர் கல்லடி ஆசிரமம் இன்று சிறப்புப் பெற்று மிளிர்வதற்கு ஆணிவேராக திகழ்ந்தார்.

கல்லடி ஆச்சிரமம் நாடளாவிய ரீதியில் பேசப்படுவதற்கு மிகுந்த அர்ப்பணிப்பான சேவையுடன் கால்கோளிட்டவர் மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜீ என்றால் மிகையில்லை.

அவர் கல்லடி ஆச்சிரமத்தில் இருந்த வேளை 2006 ஆம் ஆண்டு புகழுடம்பு எய்தினார்.

"நான் ஒரு அனாமதேயம் என்னை இயக்குபவன் இறைவனே "என்ற வாசகத்தை சொல்லி இவர் சேவை செய்த அளப்பரியது. அவர் ஒரு உன்னதமான மனிதர்.

மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மடாலயத்தின் முன்னாள் தலைவர் கர்மயோகி மாபெரும் துறவி ஸ்ரீ மத் சுவாமி ஜீவனானந்த ஜி மஹராஜ்ஜின் திருவுருவச் சிலை இன்று (24) சனிக்கிழமை கல்லடி நாவற்குடாவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுவாமி ஜீவனானந்த ஜீ நூற்றாண்டு விழாச் சபை நாவற்குடா இந்து கலாசார மண்டப முன்னாலுள்ள பிரதான வீதியில் நிறுவிய அந்தச் சிலையை இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு மூத்த துறவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ திறந்து வைத்துள்ளார்.

தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்த ஜீ மகராஜ், இலங்கை இராம கிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ், மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுர்ச்சிதானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் இந்தத் திறப்பு விழா நடைபெறுகிறது.

**விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா**
**காரைதீவு**



# யாழில் மின் மோட்டாரைத் திருத்த முற்பட்ட ஆலயப் பணியாளர் ஒருவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், சுன்னாகம் – சூளானை பகுதியில் உள்ள ஆலயமொன்றில் பிரசாதம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட நபர், வீடொன்றில் மின் மோட்டார் திருத்தச் சென்றபோது மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று உயிரிழந்த நபரின் சடலம் இன்று உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் – சூளானை பகுதியைச் சேர்ந்த 53 வயது நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

திருவிழா நடைபெற்று வரும் இந்த ஆலயத்தின் அருகில் உள்ள வீடொன்றில் மின் மோட்டார் இயங்காத காரணத்தால் ஆலயத்தில் பிரசாதம் தயாரித்துக்கொண்டிருந்த நபரை வீட்டின் உரிமையாளர் அழைத்து, மின் மோட்டார் திருத்துமாறு கேட்டுள்ளார்.

அவ்வேளை, அந்த நபர் மின் திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் டெஸ்ட்டரை எடுத்துக்கொண்டு வருமாறு வீட்டு உரிமையாளரிடம் கூறியுள்ளார்.

அவர் வீட்டினுள் சென்று டெஸ்ட்டரை எடுத்துக்கொண்டு சென்று பார்த்தபோது, மின் மோட்டார் திருத்துவதற்காக வந்த நபர் தரையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

உயிரிழந்த நபரின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும், பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டது.





# மன்னாரில் மாபெரும் போராட்டம் நடத்துவதற்கு வடக்கு கடற்றொழிலாளர் இணையம் தீர்மானம்!

(மன்னார் நிருபர்)

மீனவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நேற்று (23) இடம் பெற்ற வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் பிரச்சினை, உள்ளூர் இழுவை மடி பிரச்சினை, தடை செய்யப்பட்ட மீன்பிடி பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை கட்டுப்படுத்தக் கோரி இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்துக்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக கிளிநொச்சி மாவட்ட மீனவ பிரதிநிதி ஜோசப் பிரான்சிஸ்சும், செயலாளராக மன்னார் மாவட்டத்திலிருந்து மீனவ பிரதிநிதி முகமட் ஆலமும், பொருளாளராக யாழ்ப்பாணத்தில் இருந்து திருமதி பிரியாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உப தலைவராக முல்லைத்தீவு பிரதிநிதி தணிகாசலமும், உப செயலாளர் மன்னார் மாவட்டத்தில் இருந்து திருமதி றீற்றா வசந்தியும் தெரிவு செய்யப்பட்டதுடன் மாவட்ட தலைவர்களாக

யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து இ. முரளிதரன், கிளிநொச்சியிலிருந்து அமலதாஸ், மன்னார் மாவட்டத்திலிருந்து அன்ரனி சங்கர், முல்லைத்தீவில் இருந்து அ.நடனலிங்கம் ஆகியோர் உட்பட 16 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 56 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பிரதம அழைப்பாளராக கலாநிதி சூசைதாசனும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க தேசிய அமைப்பாளர் கேர்மன் குமார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வாக்கு மக்களின் அடிப்படை உரிமை அதனைப் பலமாகப் பயன்படுத்துக!

## சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் பாபு சர்மா தெரிவிப்பு

வாக்குரிமை மக்களின் அடிப்படை உரிமை. பலமாகப் பயன்படுத்த வேண்டும் என்று சர்வதேச இந்து மத பீடம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு மக்களாகிய நாங்கள் எமது வாக்குரிமையைப் பயன்படுத்தி நமது உரிமையை பெற்றுக் கொள்ளும் பலமான வாக்குச் சீட்டாக பயன்படுத்த வேண்டும் என சர்வதேச இந்து மத பீடம் தெரிவித்துள்ளது.

என சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கை நாட்டின் ஒவ்வொரு குடிமகனதும் அடிப்படை உரிமை வாக்களிப்பு உரிமை ஆகும். இந்த வாக்கு உரிமை தான் ஜனநாயக ரீதியானது. இந்த ஜனநாயக ரீதியாகவே எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்கள் முப்பது வருட காலத்தில் ஆயுத போராட்டத்தில் போர் சூழலில் அகப்பட்டு பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகினார்கள். இந்த நிலைமையை கருத்தில் கொண்டு வாக்குரிமையை சரியாக பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நிற்க வேண்டும்.

கடந்த காலங்களில் வாக்குரிமையை பயன்படுத்தாத காரணத்தால் தமிழ் மக்கள் அதன் விளைவை எதிர்நோக்கி இருந்தார்கள் என்பது வெள்ளிடை மலை. ஜனநாயக ரீதியான போராட்டமாக இருக்கட்டும் அல்லது ஜனநாயக ரீதியாக தலைவரை தேர்வு செய்வதாக இருக்கட்டும் நமது வாக்கு சுதந்திரத்தை பயன்படுத்தி அந்த வாக்குரிமையின் மூலம் நமது அடிப்படை உரிமைகளை பெறுவதற்கான அறப் போராட்டங்களில் இதுவும் ஒன்று என்பதை மக்கள் மறந்து விடக்கூடாது.

எனவே உங்கள் வாக்குரிமையை வீணடிக்காது உங்கள் உரிமையை பயன்படுத்தி உங்கள் உரிமைகளை தரக் கூடிய தகுந்த தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உங்களது



கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

அதனைக் கவனமாகவும் புத்திசாதுரியமாகவும் பயன்படுத்தி ஜனநாயக ரீதியான தலைவரை தேர்வு செய்வதற்கு பார்த்துக் கொண்டிராமல் பங்காளிகளாக இருந்து உங்கள் எண்ணங்களை நிறைவேற்ற இந்த தேர்தல் வழியை பயன்படுத்துவது சிறந்தது. - என்றார்.

# 40 பேர் படுகொலை செய்யப்பட்டு அழிக்கப்பட்ட வயலூர் கிராமம்!

## 39 ஆவது வருட நினைவு தினம் இன்று

- கனகராசா சரவணன்

அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ் கிராமங்கள் சிங்கள ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டுத் தமிழ் மக்கள் வாழ்ந்த இடமே இல்லாமல் ஈக்கப்பட்ட வரிசையில் வயலூர் கிராமமும் உள்ளது.

தமிழீழ போராட்ட வரலாற்றில் முதல் முதல் 1985- ஒகஸ்ட் 24 ஆம் திகதி விடுதலை இயக்கங்களுக்கும் சிங்கள பேரினவாத அரசுக்கும் இடையிலான யுத்த நிறுத்த சமாதான திம்பு பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்த நாளில் அப்பாவி விவசாயிகள் 40 பேர் படுகொலை செய்யப்பட்டு அந்தக் கிராமமே அழிக்கப்பட்டு வெளி உலகுக்கு வெளிவராது போன இனழிப்பின் வரிசையில் வயலூர் கிராமம் ஒன்றாகும். அதன் 39 ஆம் வருட நினைவேந்தல் இன்றாகும்.

சமத்துவ உரிமைக்காகப் போராடும் ஒரு சமூகத்துக்கு அரசியல் யாப்பு ரீதியான பாதுகாப்பு வழங்குவதற்குப் பதிலாக இனப் படுகொலைகளை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. தமது சொந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு தமது ஆயுதப் படைகளாலேயே அந்தச் சமூகத்தை இல்லாது ஒழுக்கும் நிலைக்குச் சென்றது.

பௌத்த கோட்பாடு அடிப்படையில் தம் இஸ்ட ஆட்சியை ஏற்படுத்த வாக்களித்த தலைவர்கள் மக்களின் ஒரு பிரிவினர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தினர். இதில் ஒன்று கறைபடியாத அப்பாவி விவசாயிகள் படுகொலைக்கு இரையான வயலூர் கிராமமாகும்.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள சாகமத்திலிருந்து தெற்குப் பக்கமாக 8 மைல் தொலைவில் வயலூர் கிராமம் 1972 ஆம் ஆண்டு காணியற்ற வறிய மக்கள் 200 குடும்பங்களை குடியமர்த்தப்பட்ட ஒரு காலனியாக இருந்தது.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மரவள்ளிக் கிழங்கும், குரக்கனும் சாப்பிடுமாறும் உணவு விடுதிகளில் சோறு சமைக்கக் கூடாது என அரசு இந்தக் கால பகுதியில் கேட்டுக் கொண்டது. இக்காலப் பகுதியில் இக் கிராமம் உணவு மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை அபிவிருத்திக்காக அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற அரசின் திட்டத்தின் கீழ் குடியமர்தப்பட்டது.

இக் கிராமத்தை அடைவதற்குச் சாகமத்தில் இருந்து காட்டு வழிபாதை மட்டும் உள்ளதுடன் நான்கு சக்கர உழவு இந்திரங்கள் மாட்டு வண்டிகள் என்பவை விவசாயத்துக்கான உள்ளீடு மற்றும் உற்பத்திகளை ஏற்றிச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டன. அதேவேளை ஏழைகள் வழமையாக இத்தூரத்தை நடந்து சென்று வந்தனர்.

இவர்கள் தடிகள், களிமண், ஒலை புல்லுகளால் தமது இருப்பிடங்களை அமைத்து குடியமர்தப்பட்டனர். இவர்களுக்குச் சுத்தமான குடி தண்ணீர், கடைகள் என்பன இருக்கவில்லை. இம் மக்கள் மலோரியா மற்றும் நீரிலான தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டதுடன் தமது வைத்தியசேவையை பூர்த்தி செய்ய 10 மையிலுக்கு அப்பால் செல்லவேண்டியிருந்தது.

இவர்கள் விவசாயமான சோளம், குரக்கன், மரவள்ளி போன்ற பயிர்களை பயிர் தொடர்ந்து செய்து வந்தனர். அவர்களது கால்நடைகளும் பயிர்களும் மிருகங்களால் அழிக்கப்பட்டும் வந்தன. நரிகள், சிறுத்தைகள் – ஆடுகள், கோழிகளைத் திருடிச் சென்ற அதேவேளை காட்டுப்பன்றிகள் பயிர்களையும் நாசம் செய்தன. ஆயினும் அவர்கள் இத்தனை கஷ்டங்களுக்கும் மத்தியில் மகிழ்சியாகத் தொடர்ந்து வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய ஒரு சமூகம்தான் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டது. அதன் எச்சங்கள் இன்றுவரை உள்ளன. இப்பூமி காடுகளாகிவிட்டது. வயலூர் மக்கள் தமது கிராமத்தை விட்டுச் செல்லும் பொழுது அரசுக்கும் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தமிருந்தது.

இந்த யுத்த நிறுத்தம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் சகோதரர் எச்.டபிள்யூ. ஜயவர்தனா தலைமையிலான அரச குழுவும் (ரி.யு.எல்.எப்) தமிழர் விடுதலைக் கூட்டணியிலான 5 இயக்கங்களுக்கும் இடையிலான திம்புவில் பேச்சு நடந்து கொண்டிருந்த சமயம் இராணுவப் படைகள் வகை தொகையின்றி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தன.

1985 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 24 ஆம் திகதி அதிகாலைவேளை வயலூர் மக்கள் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 40 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வயலூரின் தாக்குதலில் விதவையாக்கப்பட்ட பெயர் குறிப்பிட விரும்பாத 5 பிள்ளைகளுக்கு தாயான ஒருவர் தெரிவிக்கையில்,

இராணுவத்தினரின் வெறியாட்டத்தில் எனது கணவர் கொல்லப்பட்டார்.

நாங்கள் வயலூரில் கிழங்கு, மாப்பொருள்களான மரக்கறிவகைகள், பழமரங்கள் செய்கைபண்ணி வாழ்ந்துவந்தோம். ஆனால் எங்களுக்குச் சுத்தமான குடி தண்ணீர் இல்லை. கடைகள், பாடசாலை, வைத்தியசாலை இருக்கவில்லை.

சம்பவம் நடந்த அன்று அதிகாலை 6 மணியிருக்கும் பொழுது நான் அடுக்களையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தேன். திடீரென துப்பாகியுடன் வந்தவர்கள் எமது குடிசைகளைச் சுற்றி நின்று கொண்டிருப்பதை அவதானித்தேன்.

நான் பீதியடைந்து வந்தவர்களைக் கண்டு மிகப்பயந்து நடுங்கினேன். அவர்கள் வந்திருப்பதையும் நான் பதற்றப்பட்டிருப்பதையும் கண்டுகொண்ட அவர்கள் என்னை நெருங்கிச் சிங்கள மொழியில் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டனர். எனக்கு விளங்கவில்லை. அப்பொழுது எனது கணவர் வந்ததால் சைகைகளைக் காட்டி, நாங்கள் தண்ணீர் கொண்டுவரும் வாளியை எடுத்துக் கொண்டு தங்களுடன் வருமாறு கேட்டனர். எனது கணவரும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

குடிசைகளிலிருந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் யாவரையும் சூழ்ந்து கொண்டதுடன் வயோதிபர் நோயாளிகளை அப்பால் செல்லுமாறு கூறினர். பின் உடல் ஆரோக்கியமான இளைஞர்கள் அனைவரையும் தம்மோடு அழைத்துச் சென்றனர். இதில் பெண்களும் அடங்குவர்.

கிழக்கு திசையாகக் காட்டுப்பாதை வழியாக நாங்கள் நடந்தோம். இராணுவச் சிப்பாய் ஆண்களை அழைத்து தமது காலை ஆகாரத்துக்கும் முகம் கழுவுவதற்கு நீர் கொண்டு வருமாறு கேட்டனர். அப்பொழுது காலை 8 மணியிருக்கும். அவ்வாறே ஆண்கள் தண்ணீர் கொண்டு வந்ததும் சிப்பாய்கள் தமது காலை ஆகாரத்தை சாப்பிட்டனர். ஆனால் நாங்கள் பட்டினியாக இருந்தோம். ஒரு கோப்பை தேநீர் கூடக் கிடைக்கவில்லை. அவர்கள் தமது காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டதும் எல்லோரையும் தம்மோடு வருமாறு கூறினர். ஆனால் எங்கே என்று கூறவில்லை அவர்கள்.

கட்டளைக்கு இணங்கி நாங்கள் காட்டுவழிபாதை ஊடாக சென்றோம். அப்பொழுது மற்றுமொரு இராணுவச் சிப்பாய்க் குழு ஒன்றை சந்தித்தோம் அக்குழுவுக்குத் தலைமைதாங்கய உத்தியோகத்தர் ஆண்களுடன் பெண்களை அழைத்துவந்ததை பிழையெனக் கண்டுகொண்டார். இரண்டாது குழுத் தலைவர் பெண்களிடம் வந்து தமிழிலே பேசினார்.

அவர் கூறும்போது, நீங்கள் ஆண்களுடன் வரவேண்டியதில்லை. இராணுவ வீரர்கள் தமக்கு அறிமுகமற்ற பகுதியில் இருக்கின்றனர். எங்களுக்கு ஆண்கள் தேவை. அந்த மரத்தின் கீழ் சென்று மதியம் வரை காத்திருங்கள் ஆண்கள் திரும்பிவருவார்கள் என்று தெரிவித்தார்.

நாங்கள் அவ்விடத்தில் காத்திருந்தோம். அவர்கள்

தொடர்ச்சி▼

# 40 பேர் படுகொலை செய்யப்பட்டு அழிக்கப்பட்ட வயலூர் கிராமம்!

## 39 ஆவது வருட நினைவு தினம் இன்று

தொடர்ச்சி▲

குமரன் குளத்திசையில் சென்றுகொண்டிருந்தனர். ஆனால் ஆண்கள் திரும்பிவரவில்லை. சூரியகதிர் தலையை சுட்டெரிந்தது. எமது ஆண்கள் திரும்பிவரும் அறிகுறி எதுவும் தென்படவில்லை. வீட்டில் இருக்கும் எமது குழந்தைகளுக்காகவும் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எமது ஆண்களுக்காகவும் உணவு சமைக்க வேண்டியிருந்தது. எங்கள் குடிசைகளுக்கு திரும்பிவந்து உணவு சமைப்பதில் ஈடுபட்டோம். அப்பொழுது கொலைச் செய்தி வந்தது.

இச் செய்தியை கொண்டுவந்தவர் உயிர் தப்பி வந்தவர் ஏனையவர்கள் குமரன் குளப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டு கிடக்கின்றனர் என கூறினார். இந்தச் செய்தியை கேட்டு நாங்கள் அனைவரும் பாதுகாப்புக்காக உடுத்து உடையுடன் திருக்கோவில் பனங்காடு அக்கரைப்பற்று பிரதேசங்களில் உள்ள உறவினர்களிடம் தஞ்சம் புகுந்தோம். பின் படுகொலை செய்யப்பட்டவர்களை வயோதிபர்கள் அந்த இடத்துக்கு சென்று கொண்டு வந்து உரிய மரணச் சடங்குடன் புதைக்கப்பட்டனர். வயலூரில் எங்களின் சொத்துக்கள் யாவற்றையும் இழந்தோம் என்றார்.

கே.வேலுப்பிள்ளை என்பவர் தனது 2 மகன்களான குழந்தைவேல் ஜெயகாந்தன் (வயது 22), நாகலிங்கம் (வயது 22), மருமகன் சின்னவன் கந்தசாமி (வயது -30), தனது மூத்த சகோதரன் தம்பிப்பிள்ளை மாமா என்று அழைக்கப்படும் ஏரம்பு ஆகியோர் கொல்லப்பட்டனர் என்று கூறினார்.

படுகொலையின் போது உயிர் தப்பிய வர்த்தகரான வைரமுத்து கனகசபை பின்வருமாறு கூறினார்.

அடிக்கடி வியாபார நிமித்தம் வயலூருக்குச் செல்லும் நான் 23 ம் திகதி பிற்பகல் 2 மாடுகள் பூட்டிய மாட்டு வண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு திருக்கோவிலில் உள்ள ஞாயிற்றுக்கிழமை சந்தைக்காக பொருள்களை கொண்டு வர வயலூருக்கு போயிருந்தேன். அன்றிரவு மரவள்ளி கிழங்குகளை பிடுங்குவதற்காக அங்கு தங்கிருந்தேன். 24 ஆம் திகதி காலை அந்தப் பகுதியை விட்டு புறப்படும் போது அந்தக் குடியிருப்பு பகுதி முழுவதும் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. நான் விவசாயிகளுடன் ஒரு குடிசையில் இருந்தேன். நான் கைது செய்யப்பட்டாலும் பின் விடுவிக்கப்பட்ட போது நான் எடுத்துச் சென்ற பணமும் சைக்கிளும் காணாமல் போயிருந்தன.

இராணுவத்தினர் என்னை செல்லுமாறு சொன்னதால் நான் சென்றேன். ஆனால் குமரன் குளப் பகுதியில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள இடத்தில் மறைந்திருந்தேன். விவசாயிகளை விட்டு நான் சென்ற சிறிது நேரத்தில் துப்பாகி வேட்டுக்கள் கேட்டன. பின் இராணுவத்தினர் தமது வாகனத்தில் சென்ற பின்பு நான் அந்த இடத்துக்கு சென்று பார்த்தபொழுது அவர்கள் சுடப்பட்டு இறந்து கிடந்தார்கள். இரு விவசாயிகள் காயத்துடன் கிடந்தனர். ஒருவருக்கு வாய்க்குள் துப்பாகி வைத்து வெடிவைக்கப்பட்டுள்ளது. இவர் இறக்கவில்லை மற்றவரின் பெயர் நடராஜா. நான் இச் செய்தியை வயலூருக்கு சென்று கூறினேன. இதில் 40 இற்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர் என்று கனகசபை உறுதிப்படுத்தினார்

வயலூர் கிராம விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டு 23 வருடங்களின் பின்பு 2008 ஆம் ஆண்டுதான் முதல் முதலாக இப்படுகொலை பற்றி வெளியுலகுக்குக் கொண்டு வர முடிந்தது இருந்த போதும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அரசுடன் முதல் முதல் சமாதான பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் தமிழ் மக்களை சிங்கள பேரினவாத படையினரால் படுகொலை செய்யப்பட்டு ஒரு கிராமத்தையே அழித்தமை கறைபடியாத ஒரு இனப் படுகொலையாகும்.

அதேவேளை இந்தப் படுகொலையை நேரில் கண்டு சாட்சியமளித்த எவரும் தற்போது உயிருடன் இல்லை என்பது வேதனையான விடயம். இருந்தபோதும் யுத்தம் முடிந்த பின்னர் கூட இன்றுவரை இந்த மாவட்டத்தில் மக்களின் பூர்வீக தாயக பூமிகளை பேரினவாத அரசு ஆக்கிரமிப்பு செய்துவருவதை கண்கூடாக காணமுடிகின்றது.

இவ்வாறு தமிழ் தாயகத்தின் அம்பாறை மாவட்டத்தில் பல கிராமங்கள் அழிக்கப்பட்டன இருந்தபோதும் அந்த அழிக்கப்பட்ட வரலாறுகள் வெளியுலகுக்குக் கொண்டு வரப்படவில்லை. எனவே தமிழ் மக்களுக்கு நடந்த இந்த வரலாற்று இனழிப்பு தொடர்பாக தற்போதைய சமூதாயத்துக்கு தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்களுக்கு நடந்த படுகொலைகள் அந்தந்த காலத்தில் அதற்கான நினைவேந்தல்களை செய்யவேண்டும் என்பது தமிழர்களின் தலையாய கடமையாகும்.

# நாளை விவேகானந்த பூங்கா திறப்பு விழா! நான்கு சுவாமிகளின் சிலைகளும் திறப்பு!!

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அழகாக அமைக்கப்பட்டுள்ள சுவாமி விவேகானந்த பூங்கா நாளை (25) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படும். இதன்போது நான்கு சுவாமிகளது சிலைகளும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 70 அடி உயர சிலை முதலில் திறந்து வைக்கப்படும்.

பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள், சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தர், கர்மயோகி சுவாமி ஜீவனானந்த ஜீ ஆகியோரின் திருவுருவச் சிலைகள் ஏக காலத்தில் சுவாமிகளால் திறந்து வைக்கப்படும்.

திறப்பு விழாவில் பிரதம அதிதியாக தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வு ஸ்தாபகத் தலைவர் க. சற்குணேஸ்வரன் தலைமையில், இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.முரளிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் , கொழும்பு சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ மகராஜ், மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுர்ச்சிதானந்த ஜீ மகராஜ், சுவாமி மாத்ருசேவானந்தர் ஜீ மகராஜ் ஆகியோர் சிலைகளை திறந்து வைக்கவுள்ளனர்.



# சுவாமி ஜீவனானந்தஜீயின் திருவுருவச் சிலை நாவற்குடா பிரதான வீதியில் திறந்து வைப்பு!

(பழுவூரான்)

ஆன்மீகத் துறவி சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜின் திருவுருவச் சிலை மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியிலுள்ள நாவற்குடா இந்துக் கலாசார மண்டபத்துக்கு முன்பாக இன்று சனிக்கிழமை (24) காலை 7 மணிக்கு வைபவ ரீதியாகத் திரை நீக்கம் செய்து வைக் கப்பட்டது.

சுவாமி ஜீவனானந்தஜீ நூற்றாண்டு விழாச் சபை உப தலைவர் எஸ்.ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் மூத்த துறவி சுவாமி இராஜேஸ்வரா னந்தஜீ மஹராஜ் சமய வழிபாடுகளுக்கு மத்தியில் சுவாமிஜீயின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜ் நினைவுகள் மீட்டல் பெருவிழா மட்டக்களப்பு நாவற்குடா இந்துக் கலாசார மண்டபத் தில் இடம்பெற்றது.

இதன்போது ஆசியுரையை இராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளை உப தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் வழங்க,சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜுடனான நினைவுப் பகிர்வுகளை சுவாமிகளின் அணுக்கத் தொண்டர் க.பத்மநாதன், மட்டக்களப்பு காயத் திரி பீடத்தைச் சேர்ந்த சிவயோகச் செல்வன் த.சாம்பசிவம், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மூத்த ஆன்மீகத் துறவி சுவாமி இராஜேஸ் வரானந்தஜீ, சுவாமி ஜீவனானந்த நூற்றாண்டு விழாச்சபை ஆலோ சனைக்குழு உறுப்பினர் க.குரு நாதன், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தாஜீ மஹராஜ் ஆகியோர் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வின் முக்கிய அம்சமான சுவாமிகளின் திருவுருவச் சிலையை நிர்மாணிக்க முழுமையான நிதிப் பங்களிப்பை வழங்கிய கந்தையா கிருபைநாதன் ஏற்பாட்டுக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.

இந்தச் சிலை திறப்பு விழா நிகழ்வில், இந்தியா தஞ்சாவூர் இராம கிருஷ்ணமடத் தலைவர் விமூர்த்தானந்தஜீ மகராஜ், ஸ்ரீமத் சுவாமி சுரார்சிதானந்தாஜீ மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவன் உட்பட இராமகிருஷ்ணமிஷன் இல்லத் தொண்டர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# ஆன்மிக வரலாற்றில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இடம்பெறும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

ஆன்மிக வரலாற்றில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இடம்பெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இன்று காலை தொடங்கியது. இதில் காணொலி மூலம் வாழ்த்துரை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "கோயில்களை பார்த்துக்கொள்ளக் கூறி அமைச்சர் சேகர்பாபுவிடம் வழங்கினோம். ஆனால், அவர் கோயில்களிலேயே குடியிருக்கும் அமைச்சராக இருந்து வருகிறார்" என்று புகழாரம் சூட்டினார்.

தமிழ்க்கடவுளான முருகப் பெருமானின் பெருமையை உலகில் உள்ள முருக பக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில், அறுபடை வீடுகளில் 3 ஆம் படை வீடான பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இன்றும், நாளையும் நடைபெறுகிறது. மாநாட்டின் முதல் நாளான சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருவிளக்கு ஏற்றுதல் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து, மாநாடு நடைபெறும் பழனியாண்டவர் கல்லூரி வளாகத்தில் 100 அடி கம்பத்தில் இரத்தின கிரி பாலமுருகனடிமை சுவாமிகள், மாநாட்டு இலச்சினை (லோகோ) பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றி வைத்தார். காலை 9 மணிக்கு மாநாட்டு கண்காட்சியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் முதல்வர் உரையாற்றுகையில்,

"கோயில்களை பார்த்துக்கொள்ள கூறி அறநிலையத்துறையை அமைச்சர் சேகர்பாபுவிடம் வழங்கினோம். ஆனால், அவர் கோயில்களிலேயே குடியிருக்கும் அமைச்சராக இருந்து வருகிறார். அறநிலையத்துறையின் செயல்பாடுகள் அனைவரும் பாராட்டும் வகையில் உள்ளது. பழநி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ளவும் பழநியில் 58.77 ஏக்கர் நிலம் 58 கோடி ரூபாயில் கையகப்படுத்தப்பட உள்ளது.

அறுபடை வீடுகளிலும் 789 கோடி ரூபாவில் 251 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழநி முருகன் உட்பட 69 முருகன் கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு உள்ளது. திராவிட மாடல் என்பது எல்லோருக்கும் எல்லாம் என்பது தான். கோயில் சொத்துக்களை அளவீடு செய்யும் பணி நடந்து வருகிறது. அறநிலையத்துறையின் சாதனைகளை புத்தகமாக வெளியிட்டுள்ளோம். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். தமிழக வரலாறு மட்டுமின்றி ஆன்மிக வரலாற்றிலேயே அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இடம் பெறும்."– என்றார்.











# மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு: அன்புமணி ராமதாஸ் கோரிக்கை

"வங்கக்கடலில் மீன்பிடித்த நாகை மீனவர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை கிராமத்திலிருந்து வங்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 11 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. வாழ்வாதாரத்திற்காக மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படையினரின் இந்த தொடர் அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் மீது ஒருபுறம் கைது, இன்னொருபுறம் கடற்கொள்ளையர்களை ஏவித் தாக்குதல் என இரு முனைத் தாக்குதலை இலங்கை அரசு நடத்தி வருகிறது. கடந்த இரு வாரங்களில் தமிழக மீனவர்கள் மீது மூன்று முறை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், இப்போது தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். இலங்கை அரசின் இந்த நடவடிக்கை மீனவர்கள் மீது மட்டும் நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. ஒட்டுமொத்த இந்தியாவின் இறையாண்மை மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகத் தான் பார்க்க வேண்டும்.

கடந்த இரு மாதங்களில் மட்டும் தமிழக மீனவர்கள் 120 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. அவர்களில் 52 பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்ட நிலையில் மீதமுள்ள 68 பேரும் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் கைது செய்யப்படுவது மட்டுமின்றி, இரண்டாவது முறையாக கைது செய்யப்படும் மீனவர்களுக்கு 6 மாதம் சிறை, மூன்றாவது முறையாக கைது செய்யப்படும் மீனவர்களுக்கு ஓராண்டு சிறை என தமிழக மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்த போது உதவியது இந்தியா தான். ஆனால், அந்த நன்றி கூட இல்லாமல் மீனவர்களை கைது செய்வதன் மூலம் இந்தியாவை இலங்கை சீண்டிக் கொண்டிருக்கிறது. இதற்காக இலங்கை அரசுக்கு இந்தியா சரியான பாடம் புகட்ட வேண்டும்.

இன்னொருபுறம், இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான கடற்பரப்பு மிகவும் குறுகியது. அதனால் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள்ளும் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளும் நுழைவதை தவிர்க்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டு, இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத்










# நேபாளத்தில் பஸ் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் பலி

நேபாளத்தில் – இந்திய சுற்றுலாப்பயணிகள் சென்ற பஸ் ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேபாளத்தின் தனஹுன் மாவட்டத்தில், நேற்று மர்சையங்டி ஆற்றின் ஓரமாகச் சென்று கொண்டிருந்த போதே அந்த பஸ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்து நடந்த போது பஸ்ஸில 40 பேர் பயணித்துள்ளார். அதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என நேபாள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலநிலை மாற்றம், இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட இதுபோன்ற விபத்துகளினால் கடந்த ஜூலை மாதம் வரை 62 பேர் பலியாகி உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# ஜேர்மனியில் கத்திக் குத்து தாக்குதலில் மூவர் பலி!

ஜேர்மனியின் மேற்கு பகுதியில் உள்ள சோலிங்கன் நகரில் நடத்தப்பட்ட கத்திக் குத்து தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்ததுடன் நால்வர் காயமடைந்தனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை அந்த நாட்டு காவல்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

சோலிங்கன் நகரில் இடம்பெற்ற கொண்டாட்ட நிகழ்வொன்றின் போதே இந்த தாக்குதல் சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்றவர்கள் மிகுந்த அதிர்ச்சியில் உள்ளதாக சோலிங்கன் நகர முதல்வர் தெரிவித்துள்ளார்.







பக்கங்கள் 06

# கனடா முரசு

சனிக்கிழமை 24/08/2024

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் பெரு வெள்ளம் வரலாமாம்!

பிரிட்டிஷ் கொலம்பியா, ஓகஸ்ட் 24
பிரிட்டிஷ்கொலம்பியாவில் அடுத்து சில நாள்களுக்கு பெய்யும் மழை கடும் வெள்ளத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

02




# ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம் பயணிகளுக்கு பெரும் அசௌகரியம்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 24**
**பிரதான ரயில்வே சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆயிரக்கணக்கான ரயில்வே பயணிகளின் அன்றாட வாழ்க்கையைப் பாதித்துள்ளது.**

**நாட்டின் பல்வேறு நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் இவ்வாறு முடங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.**

**பெருநகரப் பகுதிகளுக்கான ரயில் சேவைகள் ஸ்தம்பித்தமடைந்துள்ளன. இதனால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

இந்த வேலைநிறுத்தம் டொரன்டோ, மொன்ரியல் மற்றும் வான்கூவர் நகரங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

GO ட்ரான்சிட் சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

டொரன்டோவைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பயணிகள் மாற்று வழியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கனடியன் நெஷனல் ரெயில்வே நிறுவனம் மற்றும் கனடியன் பசுபிக் கன்சாஸ் சிட்டி லிமிடட் ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஓகஸ்ட் 22ஆம் திகதி இவர்களின் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு இதுவரையில் உரிய பதில் கிடைக்கவில்லை என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.







# இரு பெண்கள் உயிரிழப்பு; உறவினர் தேடப்படுகின்றார்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 24

எட்டோபிகோக்கில் உள்ள ஒரு வீட்டில் இரு பெண்கள் உயிரழந்த சம்பவம் தொடர்பில் 33 வயது ஆண் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு அதிகாரிகள் வந்து பார்த்தபோது, இரண்டு பெண்கள் படுகாயங்களுடன் இருக்கின்றமையைக் கண்டனர்.

எனினும், அவர்கள் பின்னர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களின் 'உறவினர்' எனப்படும் ஆண் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.



## பிரிட்டிஷ்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வார இறுதியில் பிரிட்டிஷ் கொலம்பியாவின் தென் கடற்கரை முழுவதும் கனமழையின் அலைகள் அப்பகுதி முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என்பதை வெளிக்காட்டி வருகின்றன எனச் சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

அதிக மழைப்பொழிவு, திடீர் வெள்ளம் மற்றும் சாலைகளில் தண்ணீர் தேங்குவதற்கான அபாயத்தையும், ஆறுகள், சிற்றோடைகள் மற்றும் கல் வெட்டுகளுக்கு அருகில் சாத்தியமான மண்சரிவுகளையும் கொண்டு வரும்.

இந்த கோடையில் காட்டுத்தீயால் வெறுமையாக இருக்கும் பகுதிகளுக்கு அருகில் கூடுதல் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது.





# தொழில் காப்புறுதி பெறுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 24

தொடர்ச்சியாக இரண்டாவது மாதம் தொழில் காப்புறுதி பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாக கனடிய புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முந்தைய மாதத்தை விட தொழில் காப்புறுதி பெறுபவர்களின் எண்ணிக்கை 6,000 பேரால் உயர்ந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மொத்தம் 474,000 பேர் தொழில் காப்புறுதி பெறுகின்றனர் எனத் தகவல் தெரிவிக்கிறது.

இது கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீதம் அதிகரிப்பாகும்.

நாடளாவிய ரீதியில் 519,000 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் அல்லது வேலையில்லாமல் உள்ளனர் என ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு தொழில் காப்புறுதி பெறும் நபர்களின் எண்ணிக்கையில் ஒன்ராரியோ மாகாணம் மிகப்பெரிய அதிகரிப்பைக் கண்டுள்ளது.

ஜூன் 2023 உடன் ஒப்பிடும்போது, ஜூன் 2024 இல் ஒன்ராரியோவில் 30,000 பேர் கூடுதலாக தொழில் காப்புறுதி பெற்றுள்ளனர்.

இது ஒட்டுமொத்தமாக 25 சதவீதம் உயர்வாகும்.

நியூபவுன்ட்லேன்ட் மற்றும் லெப்ரடோர், நியூ பிறவுன்ஸ்விக், நுனாவுட் மாகாணங்களில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் ஜூன் மாதத்தில் குறைவான தொழில் காப்புறுதி பயனாளிகள் பதிவாகியுள்ளனர்.



# பதற்ற நிலைக்கு மத்தியில் புதிய தவணை இரண்டாம் நிலை வளாகங்களில் ஆரம்பம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 24

இலையுதிர் காலத்திற்குப் பின் இரண்டாம் நிலை வளாகங்களுக்குத் திரும்புவதற்கு மாணவர்கள் தயாராகி வரும் நிலையில், கோடை விடுமுறையில் பல ஒன்ராறியோ பல்கலைக் கழகங்களில் எழுந்த பாலஸ்தீனிய சார்பு எதிர்ப்பு முகாம்களால் தூண்டப்பட்ட பதற்றங்கள் நீடித்து வருகின்றன.

போராட்டங்களை ஆதரித்த அல்லது பங்கேற்ற பல மாணவர்கள் தங்கள் பாடசாலைகள் முகாம்களை எவ்வாறு கையாண்டனஎன்பதில் ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள் எனக் கூறுகிறார்கள்,

அதேவேளை சில யூத மாணவர்கள் இஸ்ரேல்-ஹமாஸ் போரைப் பற்றிய உரையாடல்கள் குறிப்பாகக் கூறப்படும் வளாகங்களுக்குத் திரும்புவது குறித்து ஆர்வமாக இருக்கின்றார்கள் எனக் கூறுகிறார்கள்.

பல்கலைக்கழகங்கள், இதற்கிடையில், கருத்துச் சுதந்திரத்திற்கான அர்ப்பணிப்புடன், அனைத்து மாணவர்களுக்கும் பாதுகாப்பான வளாகத்தை உறுதி செய்வதில் பணியாற்றி வருகின்றன கூறுகின்றன.



# 19 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன பெண்ணின் உடல் அடையாளம் காணப்பட்டது

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 24

19 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன 19 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன லை ஒன்ராரியோ பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

ஓகஸ்ட் 2005 இல் ராக்வுட் மற்றும் குயெல்ஃப் சமூகத்திற்கு இடையே பாதசாரி ஒருவரால் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் மரபணுத் தொழில்நுட்பம் இப்போது அவை டாமி எலைன் பென்னருக்கு சொந்தமானது என்று அடையாளம் கண்டுள்ளது.

41 வயதான பென்னர் 2005இல் காணாமல் போனார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பென்னரின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, ஒரு வனப்பகுதிக்கு சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டதாக நம்பப்படுவதாக பொலிஸார் கூறுகின்றனர்.

அவரது மரணத்திற்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவின் கரையோரப் பகுதிகளில் எரிபொருள் விலையில் சிறிய வீழ்ச்சி

கனடாவின் கரையோர பகுதிகளில் எரிபொருள் விலையில் சிறு வீழ்ச்சியை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வார இறுதி நாடள்களில் ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ஆறு சதங்களினால் குறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நோவா ஸ்கோசியாவில் ஒரு லிட்டர் பெட்ரோல் 6.3 சதங்களினால் குறைக்கப்படும் எனவும் இதன்படி புதிய விலை 162.5 சதங்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கேப் பிரட்டனில் ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை 164.5 சதங்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதே விதமாக டீசலின் விலையும் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரின்ஸ் எட்வர்ட் தீவுகள் மற்றும் நியூ பிரவுன்ஸ்விக்கிலும் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு முறையே 6.9 சதம் மற்றும் 6.3 சதம் என குறைக்கப்பட உள்ளது.



# ஒன்றாரியோவின் வடக்குப் பகுதியில் காட்டுத் தீச் சம்பவங்கள் அதிகரிப்பு!

ஒன்றாரியோவின் வடக்குப் பகுதியில் காட்டுத் தீச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 24 மணித்தியால காலத்தில் அதிகளவில் காட்டுத்தீச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சாபெல்யூ, ஹியரெஸ்ட், சட்பரி, ரிம்மின்ஸ், கோச்ரென்ஸ், நோர்த்பே உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் காட்டுத் தீ பரவுகையை அவதானிக்க முடிவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் சுமார் பன்னிரெண்டு புதிய காட்டுத் தீ பரவுகை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சில இடங்களில் பெருமளவான பகுதிகளில் காட்டுத் தீ பரவுகை பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# காலநிலையால் அதிகமாக பாதிக்கப்படும் கனடியர்கள்



காலநிலை காரணமாக கனடியர்கள் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக கனடிய மக்கள் நேரடியான பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நிலைமைகள் காலநிலை மாற்றம் தொடர்பான மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத்தீ, வெப்ப அலை, வெள்ளம், புயல் காற்று போன்ற அசாதாரண காலநிலையினால் கனடாவின் மூன்றில் ஒரு பங்கினர் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் இந்த கருத்துக் கணிப்பு இணைய வழியில் நடத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் ஜூலை மாத நடுப்பகுதியில் திடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சுமார் ஒரு பில்லியன் டொலர்அளவில் காப்புறுதி நட்ட ஈட்டுத்தொகை கோரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அட்லாண்டிக் கனடாவின் சில பகுதிகளிலும் இவ்வாறு சீரற்ற காலநிலையினால் கடந்த மாதம் பாதிப்பு ஏற்பட்டது.

கனடாவின் அனேக மாகாணங்களில் சீரற்ற காலநிறையினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சஸ்கற்றுவான் மற்றும் மானிடோபா ஆகிய மாகாணங்களில் மட்டும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை குறைவான நிலையில் காணப்படுகின்றது.




# நினைத்ததைவிட அதிகம் கனடியர்கள் வறுமையில்!

கனேடிய மாகாணம் ஒன்றில் அமைந்துள்ள உணவு வங்கிக்குச் சென்ற கனேடியர்கள் சிலரை திருப்பி அனுப்பும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன், தெற்கு ஒன்ராறியோவில், The Salvation Army என்னும் தொண்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த உணவு வங்கிக்குச் சென்ற கனேடியர்கள் சிலரையே திருப்பி அனுப்பும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

காரணம், அவர்களால் அத்தனை பேருக்கு உணவு வழங்க முடியவில்லை. அதாவது, அவர்களிடமிருந்த உணவுப்பொருள்கள் காலியாகி விட்டன.

ஜூன் மாதம், Food Banks Canada அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்று, நினைத்ததைவிட அதிகம் கனேடியர்கள் வறுமையில் வாழ்கிறார்கள் என்று கூறியுள்ளது.

தோராயமாக, சுமார் 25 சதவிகித கனேடியர்களால் தங்கள் குடும்பத்துக்கான உணவுப்பொருள்களை வாங்க இயலவில்லை என அந்த அமைப்பு தெரிவிக்கிறது.

Feed Ontario என்னும் அமைப்போ, ஒன்ராறியோ மாகாணத்தில் உணவு வங்கிகளைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவதாகத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், உணவு பொருள்கள் வாங்க வந்தவர்களை திருப்பி அனுப்பும் நிலையை சந்தித்த The Salvation Army என்னும் தொண்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த உணவு வங்கிக்கு மக்கள் அளித்த ஆதரவைத் தொடர்ந்து, தற்போது அந்த உணவு வங்கி மீண்டும் இயங்கத் துவங்கியுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



# ஒன்ராறியோ விபத்தில் சாரதி அங்கேயே பலி!

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தின் மிஸஸ்சாகா பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மிஸஸ்சாகாவின் 401ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் இந்த வாகன விபத்து இடம் பெற்றுள்ளது.

வியாழக்கிழமை இரவு 8.30 மணி அளவில் வெஸ்ட்பவுண்ட் எக்ஸ்பிரஸ் வீதிகளுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வாகனம் தெரு விளக்குக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும் வாகனத்தின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விபத்துக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்த விபத்து காரணமாக குறிப்பிட்ட சில நேரம் வீதிகள் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.